# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,928 — 1970 ඔක්තෝබර් 16 වැනි සිකුරාදා — 1970.10.16

14,928 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 209 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | — | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | 211 | பலவினமானவை .. .. — | — |


## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் 10 மணி தொடக்கம் 1 மணி வரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணி வரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபாரஉரிமைஅடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது,அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங் ள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் கூறிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்*

---

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினுல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பக்காரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்சுத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30,970. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் டிசெம்பர் மாதம் 21 ந் திகதி. (3) விண்ணப்பாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : போத்த லகே மனுவெல் ஜோன்ஸ் பெர்னுந்து, பாசியவத்தை, நீர் கொழும்பு, பீடி தயாரிப்பவரும், விற்பவரும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது :— (5) வகுப்பு : 45. (6) வியாபாரச்சரக்கு : பீடி. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

සුරමයා


ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1970 ம் ஆடு ஜூன் மீ 17 ந் உ.

10–445

---

(1) வியாபாரச் சின்னம் இல. 29,973. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் பெப்ரவரி மாதம் 10 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அப்துல் கபூர் மொஹமெட் ரசீக், " மலிக் பீடி இன்டஸ்றீஸ் " என்ற பெயரில் வணிகம் செய்பவர், பிற்றகம, புலத்கொகுபிற்றிய, பீடி தயாரிப்பாளரும், வியாபாரியும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : — (5) வகுப்பு : 45. (6) வியாபாரச்சரக்கு : பீடிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம்.




இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, " மலிக்—மீடியம் " ஆகிய சொற்கள் உபயோகிப்பதில், ஏகபோக உரிமை வழங்கப்பட மாட்டது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் வருடம் எப்பரல் மாதம் 3 ந் திகதி.

10–444

---

1. வியாபாரச் சின்னம் இல. : 31,509. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜூன் மாதம் 3 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) மொன்சன்றோ கம்பனி, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களில் ஒன்றுன, தெலவரே இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டு இயங்கிவரும், ஒரு கூட்டுத்தாபனம், 800 வட லின்ட் பேக், பொலேவாட், சாந்த லூயி பிராந்தியம் மிசூரி இராச்சியம், ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் என்ற முகவரியைச் சேர்ந்தது ; தயாரிப்பாளர்களும் ; வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜீ. டீ சேரம் த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 2. (6) வியாபாரச் சரக்கு : கமத் தொழில், தோட்டம் அமைக்கும் கலை வனஅபிவிருத்தி ஆகியவற்றில் உபயோகிக்கப்படும்-இரசாயன விளைவுகள் ; களை கொல்லுவதற்கும் நாசஞ் செய்யும் பிராணிகளை அழிப்பதற்குமுரிய தயாரிப்புகள், பெருவாரிநோய் கொல்லி, செடி அல்லது பற்றை கொல்லி. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**ROUNDUP**

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1970 ம் வருடம் மார்ச் மாதம் 13 ந் திகதி.

10–533

---

1. வியாபாரச்சின்னம் இல. : 30,099. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் மார்ச் மாதம் 8 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : குவைற் நாஷனல் பெற்றோலியம் கம்பெனி (கே.எஸ்.சி.) மகுவைற் அரசுவின் சட்டங்களின் அடிப்படையில் இணைக்கப்பெற்ற பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு பங்குக் கம்பெனி), கே. என். பி. ஜீ. கட்டடம், குவைற் என்ற முகவரியைச் சோந்தது ; தயாரிப்பவர்களும், வியாபாரிகளும்., (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் : எவ். ஜே. அன்டு ஜீ. டி. சேரம், த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 47. (6) வியாபாரச் சரக்கு : பெற்றோலியம், பெற்றோலிய விளைவுப் பொருள்கள், எரிபொருள் வாயுவகை, உராய்வு நீக்குவதற்கும், சூடாக்குவதற்கும், எரிப்பதற்கும் உரிய எண்ணெய் வகையும், கொழுப்பும்— இப்பொருள்கள் யாவும் 47ம் வகுப்பில் சேர்க்கப்பட்டவை. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :



இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, "பி. கே." என்ற எழுத்துகள் உபயோகிப்பதற்கு ஏகபோக உரிமை வழங்கப்பட மாட்டாது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் வருடம் மே மாதம் 4 ந் திகதி.

10–534

(1) வியாபாரச்சின்னம் இல. : 31,106. (2) பெற்ற திகதி : 1969ம வருடம் பெப்ரவரி மாதம் 10 ந திகதி (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டாக்டர் லஷ்மிநாத் வீரசேகர மெதிவாக்க, டாக்டர் எல். டபிள்யு மெதிவாக்க அசோசியேற்ஸ் என்ற பெயரில் வணிகம் செய்பவர் குண்டசாலை ; எந்திர ஆயுதங்கள் தயாரிப்பவர். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது :— (5) வகுப்பு : 6. (6) வியாபாரச்சரக்கு : எந்திர ஆயுதங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**BOX FORD**

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் வருடம் ஜூன் மாதம் 2 ந திகதி.

10–564

---

## ஆக்க உரிமைக் கப்பளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவுப்புகள்

### அறிவித்தல்

பின்வரும் விபரக்கூற்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இல. 5821. 1966 ம் ஆண்டு யூலை மாதம் 11 ந திகதி (46 ம் பிரிவின் கீழ் 20.3.62 ந திகதியின் 997, 638 ம் இலக்க ஐக்கிய அரசு ஆக்கவுரிமைப் பதிவு)


மேர்கு அன் கோ, இன்க்.,

" இன்டேரல் பெறுதிகள் "

பொழிப்பு :

கண்டுபிடிப்பின் இயல்பு பின்வரும் 1 ம் உரிமை கோரல் மூலம் நிச்சயிக்கப்படலாம்

சூத்திரத்தின் கூட்டமைப்பு




$R^1$ 5 அல்லது 6 அணுக்கள் ஒவ்வொன்றினதும் ஒன்று அல்லது இரண்டு உருகிய வளையங்களின் வாசனை முதலாகும். ஒன்றிற்கு மேற்படாத பலவின வட்டவளையமும், மூன்றிற்கு மேற்படாத பலவின அணுக்களும் உண்டு. பலவின அணுக்கள் ஒட்சிசன், நைதரசன், அல்லது கந்தகமாகும். வாசனை முதல்கள், கீற்றோ இரு ஐதரோ வாசனை முதல்களையும், நைதரசன் பலவின வட்ட வளையங்களின் நைதரச ஒட்சைட்டுகளையும் உள்ளடக்கியதாகும். இவ்வாசனை முதல்களில் எந்தப் பிரதியீட்டுப்பொருளும் உப்பாக்கி அணுக்கள் அல்லது ஐதரொட்சி காபன் 1–5 அற்கைல் காபன் 1–5 அல்கொற்சி, பீனைல், பீநொட்சி, நைதரோ, காபன் 1–6 அற்கனைலமினோ, இரு (காபன் 1–5 அற்கைல்) அமினோ, மேகபுடோ, காபன் 1–5 அற்கைல்தியோ, பரிவேடம் காபன் 1–5 அற்கைல்தியோ, பென்சைல்தியோ, பென்சைலொட்சி, பீனைல் தியோ, பரிவேடம் காபன் 1–5 அற்கைல், காபன் 1–6 அற்கனைல், காபன் 1–6 அற்கனைலொட்சி, பரிவேடம் காபன் 1–6 அற்கனைல், பரிவேடம் காபன் 1–5 அற்கொட்சி, சயனோ, இரு (காபன் 1–5 அற்கனைல்) சல்போனமைட்டு, காபோ காபன் 1–5 அற்கொட்சி, அலிட்டிகைட்டு, இரு (காபன் 1–5 அற்கைல்) காபொட்சமைட்டு, காபன் 1–5 அற்கைல்சல் பினைல், காபன் 1–5 அற்கைல்சல் பொனைல் முதல்களாகும். $R^{11}$ ஒரு ஐதரசன் அணு அல்லது ஒரு காபன் 1–5 அற்கைல் அல்லது ஒரு காபன் 2–5 அற்கைல், பீனைல் அல்லது பென்சைல் முதல் ஆகும். $R^*$ ஒரு ஐதரசன் அணு, அல்லது ஒரு காபன் 1–5 அற்கைல் அல்லது காபன் 2–5 அற்கனைல், முதல் அல்லது $R^0$ உடன் சேர்ந்து காபன் அணு அல்லது வட்டப்புறப்பேன் வளையத்துடன் இருமடி பிணைந்துள்ள மீதைலின் குழுவாக அமையும். $R^0$, $R^*$ உடன்சேர்ந்து மீதைலின் முதல் அல்லது வட்டப்புறப்பேன் வளையத்தை அமைக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர மற்றைய நேரங்களில் ஒரு ஐதரசன் அணுவாகும்) R ஒரு ஐதரசன் அல்லது உறிஞ்சிஒளிவீசும் அணு (புளூரினோ அணு ஓர் ஐதரொட்சி, காபன் 1–5 அற்கைல், காபன் 1–5 அற்கொட்சி, காபன் 2–5 அற்கனைல், பலவின உறிஞ்சி ஒளிவீசும் அற்கனைல், நைதரோ, அமினோ, மோபோலினோ, நைதரசன்–மீதைல் பைபெரிசினோ, இருசைட்சினதிலமினோ, காபன் 1–6 அற்கனொயிலலினோ, நைதரசன் (காபன் 1–5 அற்கைல்) காபன் 1–6 அற்கனைமமினோ, காபன் 1–5 அற்கைமமினோ, இரு (காபன் 1–5 அற்கைல்) அமினோ, நைதரசன்–புறோலிடினைல், நைதரசன்–அசோசைகுளோபுறோபில், சயனோ, அமினோ மீதைல், இரு மீதைல்மினோமீதைல் இரு அற்கைல்சல்போனமினோ, பென்சைல், மேகபுடோ முதலாகும். மேலும் ஒரு ஐதரோட்சி அமுனோ, பென்சைலொட்சி, காபன் 1–5 அற்கொட்சி, அல்லது Z நேரயனுயின் OZ முதல் ஆகும்.

30 உரிமை கோரல்களும் 43 உதாரணங்களும் உண்டு.

எஸ். எல். த சில்வா,
ஆக்கவுரிமைப்பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு மார்ச்சு மீ 7 ந உ.

10–489/2

---

### அறிவிப்பு

பின்வரும் விவரணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :

1966 ஜுன் 23 ம் திகதிக்குரிய 5818 ம் இலக்கம் (அ. ஐ. மா. தின் 469144 ம் இலக்க முதன்மை கோரும் வழமையான விண்ணப்பத் திகதி 2.7.65)

கால்கேற்—பல்மொலிவ் கம்பெனி :

" அழுக்கு நீக்கும் சலவைக் கட்டிகள் உற்பத்தி செய்தல் "

பொழிப்பு :

1 ம் உரிமையிலிருந்து புதிதுகாணும் தன்மை நிச்சயப்படுத்தப்படலாம். அது பின்வருமாறு கூறப்படுகின்றது.

தொகுப்பு அனயனிக்கு அழுக்கு நீக்கியையும், இதன் அளவை விட மேலதிக விகிதத்திலிருக்கும் நீரில் கரையக்கூடிய திண்ம வடிவ அமைப்பைக் கொடுக்கும் உப்பையும் உற்பத்தி செய்யும் முறையில் அமிலவடிவிலுள்ள அனயனிக்கு அழுக்கு நீக்கியும், நீரில் கரையக் கூடிய திண்ம வடிவ அமைப்பைக் கொடுக்கும் மேலதிக உப்பும், இவ்வமிலத்தை நடுநிலையாக்கும் கருவியான ஒரு காரமும் தொடர்ச்சியாக ஒரு வலயத்தினுள் அனுப்பப்படுகின்றன. இவ்விதம் அனுப்பப்பட்ட பொருட்கள் தொடர்ச்சியாக ஒன்று சேர்க்கப்பட்டு மிகச் சிறிய துண்டுகளாக வெட்டப்பட்டு அவ்வலயத்திற்கூடாக அனுப்பப்படுகின்றன. அதன் பின் அவ்வலயத்திலிருந்து நடுநிலையாக்கப்பட்ட தொகுப்பு அனயனிக் அழுக்கு நீக்கி சேர்ந்த பிளாத்திக்குக்கூட்டும், திண்மவடிவ அமைப்பைக் கொடுக்கும் உப்பும் தொடர்ச்சியாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

இதில் 42 உரிமைகளும், 17 உதாரணங்களும், 4 வரைதற் பத்திரங்களும் உள.

எஸ். எல். டீ. சில்வா,
பேற்ரன் பதிவுகாரர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு மார்ச் மீ 7 ந உ.

10–489/1

---

### அறிவித்தல்

பின்வரும் நிர்ணயக் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது :—

1967 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ந திகதிய 5939 ம் இலக்கமுடையது. (ஐக்கிய அரசு ஆக்கஉரிமைப் பதிவு இல. 959, 819 யும் பிரிவு 46 யும் திகதி 2.10.61 யும் உடையது)


**சான்டேஸ் லிமிற்றெட்** (சமாசம்) :

" போடோ ஃபிளினிக்கமில ஈதையில் ஐட்றசயிட்டு சம்பந்தமான முன்னேற்றங்கள் "

சாரம் :

சம்பந்தப்பட்ட கிரிகையின் தன்மையினை பாத்தியத்தை ஒன்றின் மூலம் அறியலாம். அஃது பின்வருமாறு கூறுகின்றது :—

போடோ ஃபிளினிக் கமில ஈதையில் ஐட்ரசயிட்டு தயாரிக்கும் முறை (வாய்பாடு I) யாவது




போடோ ஃபிளினிக் அமில எதிலிடீன்ஸ் ஐட்ரசயிட் கரைப்பானை மந்த நிலையில் கரைசலாக $C=N$ ஈரிணைப்பால் சுருக்குதலாகும். இது சம்பந்தமாக 7 பாத்தியதைகளும் ஒரு உதாரணமும் உள.

எஸ். எல். டி. சில்வா,
ஆக்க உரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 4 ந் உ.

10–489/3

---

## அறிவித்தல்

பின்வரும் நிர்ணயக் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது :—

1967 ம் ஆண்டு சித்திரை மாதம் 22 ம் திகதிய 5966 ம் இலக்க முடையது. (ஐக்கிய அரசு ஆக்க உரிமைப் பதிவு இல. 1, 027, 803 உம் பிரிவு 46 உம் திகதி 20.2.63 உம் உடையது)

கம்பனி ஃபிருன்கையிஸ் தொம்சன் கூஸ்ரன்–கொக்கிஸ் பிருண்ட " ஆவியாக்கலால் குளிரூட்டும் முறைகள் ".

சாரம் :

சம்பந்தப்பட்ட கிரிகையின் தன்மையினை பாத்தியதை ஒன்றில் அறியலாம். அஃது பின்வருமாறு கூறுகின்றது.

வெப்பக் கடத்தி உலோகத்தாலாய சுவரொன்றை ஆவியாக்கலால் குளிரூட்டும் முறையில் இடம் பெறுகின்றது. இதன் ஒருபக்கம் வெப்பவாக்கத்திற்கும் எதிர்ப்பக்கம் ஆவியாகக்கூடிய பாய்பொருளுக்கும் அமைவாக அமைந்துள்ளது. பாய்பொருள் பக்கமுள்ள சுவரின் பகுதி தம்மிடையே இடைவெளி இருக்கக்கூடியதாய தாழ்பாத்தி நிரல்களாலாயது. உயர்ந்த தண்டு நிகர் நிரல்களும் தாழ்பாத்தி நிரல்களும் படிப்படியாக ஒப்பீடு செய்யும் தண்ணம் அளவுகளைப் பொறுத்தவரையில் அமைக்கப்பட்டுள்ளன.

$$d < \frac{b}{3},\ b = m\ \sqrt{ac}$$

இங்கு d என்பது தாழ்பாத்திகளின் சராசரிக் குறுக்ககலத்தினையும் b தாழ்வின் ஆழத்தையும் a என்பது உயர்ந்த தண்டுநிகர் நிரல்களின் சராசரி அகலத்தையும் குறிக்கும். a அடுத்துள தாழ்பாத்திகளின் தூரமுமாகும். c வெப்பக்கடத்து திறன் (சுவரின் உலோகத்தின்) m என்பது 0·7 க்கும் 1·8 க்கும் இடைப்பட்ட எண் குணகமாகும். a, b, d என்பன சதம மீற்றரில் குறிக்கப்படின் c வெளிப்போக்கும் வெப்பம் உவாற்று/சதமமீ/சதம பாகையினும் குறிக்கப்படும்.

இது சம்பந்தமாக 12 பாத்தியதைகளும் 7 வரைபடக் காகிதங்களும் உள.

எஸ். எல். டி. சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு செப்டம்பர் மீ 4 ந் உ.

10–489/4

## அறிவித்தல்

பின்வரும் நிர்ணயக் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1969 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ம் திகதிய 6301 வது இலக்கம் உடையது (46 ம் பிரிவின் கீழ் 24.3.44 திகதிய அன்று 790, 119 ம் இலக்க பிரிட்டிஸ் ஆக்க உரிமைப் பதிவு பெற்றது.)

மெற்றல் குளோசேர்ஸ் லிமிட்டெட்

" போத்தல்களினதும் அவைபோன்ற மற்றும் கலசங்களினதும் மூடிகளினது அல்லது அவை சம்பந்தப்பட்டவற்றினது அபிவிருத்திகள் "

சாரம் :

மேற்குறிப்பிட்ட கண்டுபிடிப்பு எத்தன்மையது என்பதை பின்வருமாறு கூறும் முதலாவது பாத்தியதையிலிருந்து மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

ஒரு போத்தலினதோ அல்லது அதுபோன்ற வகையைச் சேர்ந்த கலசத்தினதோ மூடியானது, ஒரே துண்டினாலான கிண்ணம் போன்ற பகுதியைக் கொண்டதாகும். கிண்ணத்தின் அருகுப்பக்கமானது கலசத்தைத் திரும்ப மூடுவதற்கு வகை செய்யக்கூடியதாக பிரஸ்தாப கிண்ணத்தின் அடித்தளத்துடன் பொருந்தியுள்ள மேற்பகுதியையும் பாதுகாப்பு வளையம் ஒன்றைப் பொருத்தக்கூடிய கீழ்ப்பகுதியையும், கீழ்ப்பகுதியையும் மேற்பகுதியையும் இலகுவில் பிரிக்க வகை செய்யக்கூடிய விதத்தில் வட்டில் வடிவத்தில் வெளிநோக்கி அமைந்துள்ள மத்திய பகுதியையும் கொண்டதாகும். மூடியானது கலசத்தின் மீது இயங்கும் வேளையில், கலசத்தின் வாய்ப்பகுதியில் உள்ள எதிர்பக்கமான திருகாணிப்புரியுடன் இணங்கக்கூடிய வகையில் அருகுப்பக்கத்தினது மேற்பகுதியும் கீழ்ப்பகுதியும் பொருத்தப்பட்டுள்ளன. அருகுப்பக்கத்தினது மேற்பகுதியையும், கீழ்ப்பகுதியையும் பிரித்த பின்னர், கலசத்தின்மீது கீழ்ப்பகுதியை நெட்டயமாய் அசைப்பதன் மூலம் அதனை அகற்றக்கூடிய வகையில், மேற்பகுதினது உள்விட்டம் கீழ்ப்பகுதியினது உள்விட்டத்தைவிடக் குறைவானதாக இருக்கும்.

இது சம்பந்தமாக 14 பாத்தியதைகளும், 4 வரைபடகாகிதங்களும் உள்ளன.

எஸ். எல். டி. சில்வா
ஆக்க உரிமைப் பதிவாளர்

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 9 ந் உ.


10–489/5

---

## பிழை திருத்தம்


1970.9.18 ல், 14,924 ம் இலக்கத்தையுடைய இலங்கை அரசாங் வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள, 1966.6.1 திகதியுடைய 5814 என்ற இலக்கத்தை மேற்கொண்ட ஆக்கவுரிமை சம்பந்தமான அறிவித்தலிலுள்ள இரண்டாவது உரிமைக் கோரிக்கை பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் :—

" 2. உரிமைக் கோரிக்கை 1 ல் கோரப்பட்ட முறை பின்வரு பொதுச் சூத்திரத்தின் ஓர் இராசுமிக்குக்குரிய அல்லது ஓர் ஒளியியு ருக்கற் சேர்வைக்குட்பட்டதையும் கொள்ளும் சூத்திரம் :—




இதில் $R_1$ ஓர் இழிந்த அற்கயில், ஓர் இழிந்த சைக்ளோ அற்கயில் அற்கயில் அல்லது ஓர் இழிந்த அற்கனைல் கூட்டத்தைக் குறிக்கிறது $R_2$ ஐதரசன், ஓர் இழிந்த அற்கயில் கூட்டம் அல்லது ஓர் இழிந்த சைக்ளோ அற்கயில் அற்கயில் கூட்டம் ; $R_3$ ஐதரசன், ஓர் இழிந்த

அற்கயில் அல்லது சைக்ளோ அற்கயில் அற்கயில் ; $R_4$ ஓர் இழிந்த அற்கயில், ஐதரசி அற்கயில், அற்கொட்சி அற்கயில் அல்லது பென்சைல் கூட்டத்தைக் குறிக்கிறது.




அல்லது $R_1 R_2$ மற்றும் $R_4$ மேற்படி அர்த்தத்தைக் கொடுக்கும் சூத்திரத்தின்படி வட்டமிடுதற்கு ஓர் இராசுமிக்குக்குரிய அல்லது ஒளியியற்தாக்கச் சேர்வை.

விரும்பினுல், இவ்வாறு பெறப்பட்ட 1, 2, 3, 4, 4a, 5, 10b–என்ற ஐதர–பெனன் திரைடைன் சேர்வையை ஒத்த ஒரு 1, 2, 3, 4, 4a, 10b அறுவைதர பெனன் திரைடைன் சேர்வையை ஐதரசனேற்றி, ரதேனும் பென்சைலொட்சி கூட்டம் $R_4O$ கூட்டத்தை ஐதரொட்சி கூட்டமாக மாற்றி.

விரும்பினுல், நைதரசனில் இவ்வாறு பெறப்பட்ட எண் ஐதரோபெனன் திரைடைன் சேர்வையின் மாற்றுப் பொருளாக இழிந்த அற்கையில் அல்லது சைக்ளோ அற்கயில் அற்கயில் கூட்டத்தை உபயோகித்து, விரும்பினுல், அவ்வாறு பெறப்பட்ட அறு அல்லது எண் ஐதரோபெனன் திரைடைன் சேர்வையை உப்பாகவும், அத்துடன்/அல்லது, இரசிமேற்று விடயத்தில், அவ்விதமான இரசிமேற்றை ஒளியியல் எதிரிடிகளாக மாற்றுதல். ”

எஸ். எல். டி சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரம்பர் மீ 27 ந் உ.

10–473/2

---

## பிழை திருத்தம்

1970.9.18 ல் 14,924 ம் இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள, 1966.3.1 திகதியையுடைய 5800 என்ற எண்ணுடைய ஆக்கவுரிமை சம்பந்தமான அறிவித்தலில் கடைசியாகவுள்ள விடயம் பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் :—

" ஆங்கு 19 உரிமைக் கோரிக்கைகளும், 15 உதாரணங்களுய, சித்திரம் வரைந்த ஒரு தாளும் உள்ளன ."

எஸ். எல். டி சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரம்பர் மீ 27 ந் உ.

10–473/1

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் **ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

### அட்டவணை— 1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | த.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | த.ப | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | த.ப | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | த.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | த.ப | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ௵ யூன் ௴ 2 ஆந் உ

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.